# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு


## பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

### இலங்கை மத்திய வங்கி

2024 நவெம்பர்
தொகுதி 06 வெளியீடு 11


## முக்கிய பண்புகள்

### மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்





2024 நவெம்பரில் வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 994 மில்லியனிற்கு 0.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சிறியளவு வீழ்ச்சியடைந்தன.

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்




2024 நவெம்பரில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,496 மில்லியனிற்கு 7.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி வீதங்கள் (%)





2024 நவெம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினம் என்பன முறையே 7.0 சதவீதத்தினாலும் 10.4 சதவீதத்தினாலும் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தன.

### வர்த்தக மீதி (ஐ.அ.டொ. மில்)





வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2023 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 390 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 நவெம்பரில் ஐ.அ.டொலர் 502 மில்லியனிற்கு விரிவடைந்தது.

## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் (2024 சன-நவெ)




# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம் (சன-நவெ)




### ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் (சன-நவெ)





கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் உந்தப்பட்டு, ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2024 நவெம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தன.


2024 நவெம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 12.4 சதவீதத்தினால் மேம்பட்ட வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 4.8 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது.

## வேளாண்மை ஏற்றுமதிகள்


### வேளாண்மை ஏற்றுமதிகள்





### வேளாண்மை ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-நவெ)




### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்





*2024 மே மற்றும் ஒகத்து மாதங்களிற்கான இறப்பர் (நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர்) விலைகள் ஏலத்தில் குறித்துரைக்கப்படவில்லை.


தேயிலை, தெங்குசார் உற்பத்திகள் மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பவற்றிலிருந்தான உயர்ந்தளவிலான வருவாய்களினால் உந்தப்பட்டு, 2024 நவெம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தன. இருப்பினும், இக்காலப்பகுதியில் சிறு வேளாண்மை உற்பத்திகள் மற்றும் கடலுணவு என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

## கைத்தொழில் ஏற்றுமதிகள்


### கைத்தொழில் ஏற்றுமதிகள்





### கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-நவெ)





### நீர்க்கலவ மற்றும் வானூர்தி மற்றும் எரிபொருட்களின் ஏற்றுமதி விலைகள்





பெற்றோலிய உற்பத்திகளினால் உந்தப்பட்டு 2023 நவெம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியில் அதிகரித்தன. மேலும், புடவைகள் மற்றும் ஆடைகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பவற்றின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும், இக்காலப்பகுதியில் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

## இறக்குமதிச் செயலாற்றம்

### இறக்குமதிச் செயலாற்றம் (சன-நவெ)





### இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் (சன-நவெ)





இறக்குமதிகளின் சகல முக்கிய வகைகளிலும் உறப்பட்ட உயர்ந்தளவிலான செலவினத்தின் காரணமாக 2024 நவெம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தது. அதேவேளை, பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 16.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள்


### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகள்





### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-நவெ)





### சீனி, தானியங்கள் மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்





எண்ணெய் மற்றும் கொழுப்புக்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் காய்கறிகள் என்பவற்றினால் உந்தப்பட்டு, உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் அதிகரித்தளவிலான இறக்குமதிகளின் காரணமாக 2024 நவெம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்த போதிலும் இக்காலப்பகுதியில் மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள், பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் சீனி என்பவற்றின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன.

## இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள்


### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்





### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்



### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-நவெ)




### மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்த சராசரிகள்)





*2023 பெப்புருவரி மற்றும் செத்தெம்பர் மற்றும் 2024 ஓகத்து ஆகிய மாதங்களில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை.


புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், இரசாயன உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் மற்றும் இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் என்பவற்றின் உயர்ந்தளவிலான இறக்குமதிகளின் முதன்மைக் காரணமாக 2024 நவெம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் (ஆண்டிற்கு ஆண்டு) அடிப்படையில் அதிகரித்தது. இருப்பினும், தொடர்புடைய காலப்பகுதியில் எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது.

## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகள்


### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் மீதான செலவினம்




### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-நவெ)




பொறி மற்றும் சாதனங்கள், கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் ஆகிய சகல முக்கிய முதலீட்டுப் பொருள் வகைகளிலும் ஏற்பட்ட உயர்ந்தளவிலான இறக்குமதிச் செலவினத்தின் காரணமாக 2024 நவெம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது.

## வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு (அ)

### ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2023 நவெ | 2024 நவெ | ஆ-ஆ. மாற்றம் (%) | 2023 சன-நவெ | 2024 சன-நவெ | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | | **214.8** | **228.0** | **6.1** | **2,359.9** | **2,517.9** | **6.7** |
| இதில் | தேயிலை | 112.8 | 118.2 | 4.7 | 1,198.8 | 1,304.3 | 8.8 |
| | தெங்கு | 28.7 | 32.7 | 14.0 | 313.6 | 380.5 | 21.3 |
| | வாசனைத்திரவியங்கள் | 30.9 | 40.7 | 31.7 | 361.6 | 407.9 | 12.8 |
| | கடலுணவு | 25.2 | 16.5 | -34.6 | 238.4 | 212.8 | -10.7 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | | **765.4** | **762.9** | **-0.3** | **8,486.8** | **9,105.3** | **7.3** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 396.2 | 398.0 | 0.5 | 4,439.0 | 4,613.4 | 3.9 |
| | இறப்பர் உற்பத்திகள் | 77.2 | 75.1 | -2.8 | 824.1 | 897.2 | 8.9 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 55.2 | 70.0 | 26.9 | 478.3 | 975.5 | 104.0 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 50.3 | 51.2 | 1.8 | 495.0 | 594.0 | 20.0 |
| | பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 42.6 | 36.7 | -13.9 | 555.1 | 446.0 | -19.7 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 35.9 | 27.9 | -22.3 | 475.5 | 365.5 | -23.1 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் | 5.8 | 4.9 | -15.3 | 66.4 | 57.3 | -13.7 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதிகள்** | | **18.8** | **3.3** | **-82.6** | **62.2** | **46.9** | **-24.5** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | | **999.0** | **994.1** | **-0.5** | **10,908.9** | **11,670.2** | **7.0** |

### இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2023 நவெ | 2024 நவெ | ஆ-ஆ. மாற்றம் (%) | 2023 சன-நவெ | 2024 சன-நவெ | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | | **265.2** | **319.6** | **20.5** | **2,771.2** | **3,068.1** | **10.7** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 133.2 | 164.0 | 23.1 | 1,541.0 | 1,671.8 | 8.5 |
| இதில் | காய்கறிகள் (ஆ) | 29.3 | 32.4 | 10.5 | 326.5 | 397.4 | 21.7 |
| | அரிசி | 1.2 | 1.3 | 10.3 | 16.1 | 40.0 | 149.1 |
| **உணவல்லா நுகர்வுப் பொருட்கள்** | | 132.0 | 155.6 | 17.9 | 1,230.1 | 1,396.3 | 13.5 |
| இதில் | மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 56.6 | 57.6 | 1.8 | 620.3 | 515.1 | -17.0 |
| **இடைநிலைப் பொருட்கள்** | | **867.8** | **920.1** | **6.0** | **10,058.2** | **10,789.7** | **7.3** |
| இதில் | எரிபொருள் | 316.9 | 310.7 | -2.0 | 4,288.5 | 3,920.4 | -8.6 |
| | புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 203.2 | 241.6 | 18.9 | 2,188.0 | 2,594.5 | 18.6 |
| | வளமாக்கிகள் | 25.9 | 10.8 | -58.1 | 200.5 | 173.9 | -13.2 |
| | கோதுமை மற்றும் சோளம் | 21.4 | 37.2 | 73.5 | 318.3 | 324.3 | 1.9 |
| **முதலீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **255.7** | **256.6** | **0.3** | **2,493.2** | **3,059.2** | **22.7** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 168.4 | 168.3 | -0.1 | 1,692.8 | 2,072.8 | 22.4 |
| **மொத்த இறக்குமதிகள்** | | **1,388.7** | **1,496.3** | **7.7** | **15,322.6** | **16,916.9** | **10.4** |

### வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | 2023 நவெ | 2024 நவெ | 2023 சன-நவெ | 2024 சன-நவெ |
|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | -389.7 | -502.2 | -4,413.6 | -5,246.7 |

### வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (இ)

| விடயம் | 2023 நவெ | 2024 நவெ | ஆ-ஆ. மாற்றம் (%) | 2023 சன-நவெ | 2024 சன-நவெ | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | | | | | | |
| பெறுமதிச் சுட்டெண் | 139.0 | 138.4 | -0.5 | 138.0 | 147.7 | 7.0 |
| அளவுச் சுட்டெண் | 155.0 | 158.9 | 2.5 | 167.0 | 187.7 | 12.4 |
| அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 89.7 | 87.1 | -2.9 | 82.7 | 78.7 | -4.8 |
| **இறக்குமதி** | | | | | | |
| பெறுமதிச் சுட்டெண் | 124.3 | 133.9 | 7.7 | 124.7 | 137.6 | 10.4 |
| அளவுச் சுட்டெண் | 127.6 | 139.0 | 8.9 | 128.7 | 150.2 | 16.7 |
| அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 97.4 | 96.4 | -1.0 | 96.9 | 91.6 | -5.4 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | 92.1 | 90.3 | -1.9 | 85.3 | 85.8 | 0.6 |

(அ) தற்காலிகமானது

(ஆ) தானியங்கள், வெங்காயம், உருளைக்கிழங்குகள், அவரை வகை காய்கறிகள் மற்றும் ஏனையவற்றினை உள்ளடக்கியுள்ளது

(இ) ஐ.அ.டொ. நியதிகளில்